2010 ம் ஆண்டு ஜூன் திங்களில் கோவையில் நடைபெற்ற செம்மொழி மாநாட்டில் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்து உரையாற்றிய திரு.அண்ணாமலை சுந்தரம் அவர்களுக்கு சிட்னி நகரத்தார்கள் சார்பில் அளித்த வாழ்த்திதழ்

உலகத்தமிழ் மாநாட்டில் உயர்தமிழை பரப்பியவர்
உயர்வான சுந்தரனார் அழகம்மை பெற்றமகன்
எப்பொழுதும் தன்னுரையில் பெற்றோரை வணங்கிடுவார்
தப்பாமல் பிறந்தமகன் தரணியிலே சிறந்தமகன்
.
பண்பாட்டு மொழியை பயன்பாட்டு மொழியாக்க
இனியதொரு தன்கருத்தை இயல்பாக எடுத்துரைத்தார்
டேனியல் கோல்மேனின் உணர்ச்சிபூர்வ ஆராய்ச்சியை
தன்பேச்சில் நயம்படவே சிறப்பாக எடுத்துரைத்தார்.

பகட்டுடனே வாழாமல் பண்புடனே வாழ்ந்துவரும்
பலவான்குடி பிறந்த அண்ணாமலை அண்ணன்,
கைமாறு கருதாமல் உதவிசெய்யும் குணமுடையார்
கதிர்வேலன் திருவருளால் நீடுழி வாழ்ந்திடுக...

சைவமும் தனித்தமிழும் வளர்த்தவர்கள் நம்முன்னோர்
அவ்வழியே வந்ததனால் பைந்தமிழை வளர்க்கநீங்கள்
கடல்கடந்து சென்றுவந்தீர் கன்னித்தமிழ் பேசிடவே
காவிரிபோல் வளம்பெற்று எந்நாளும் நீடுவாழ்க.

சிட்னியிலே வாழ்கின்ற நகரத்தார் நாங்களெல்லாம்
மட்டற்ற மகிழ்வோடு மனதார வாழ்த்துகிறோம்
எட்டுத் திக்கெங்கும் உங்கள்புகழ் பரவிடவே
எழில்வேலன் திருவருளை எந்நாளும் வேண்டுகிறோம்

என அன்புடன் வாழ்த்தும்

சிட்னி நகரத்தார்கள்

பாவாக்கம் : **G.**கருப்பன்செட்டி, , தேவகோட்டை